In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| CC : | 445/2015 |
| PW: | 6 |
| காவல் நிலையம்: | கொப்பம்பட்டி |
| தேதி: | 09-04-2026 நாள்: வியாழன் |
| பெயர்: | முத்துராமலிங்கம் |
| த/பெ: | சோமு |
| ஊர்: | கோவில்பட்டி |
| வேலை: | சிறப்பு உதவி ஆய்வாளர் ( ஓய்வு ) |
| வயது: | 67 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.04.2026**

(Accused A3 present. A1,A2,A4 absent. Petition U/s.317 CrPC/355 BNSS filed and allowed).

**முதல்விசாரணை**

1) நான் கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். நான் தற்போது கொப்பம்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து 2017 ம் வருடம் ஓய்வு பெற்றுவிட்டேன். கொப்பம்பட்டி காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்த போது கடந்த 03.07.2015 ம் தேதி 14.30 மணிக்கு நான் ரோந்தில் இருந்த போது, நிலையத்தில் இருந்த கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று கோவில்பட்டி அரசு மருத்துவமனை சென்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த கரிசல் குளம் கீழத்தெரு, செல்லக்குட்டி மகன் ஸ்டாலின் தனசிங் என்பவர் கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலையம் 16.00 மணிக்கு வந்து புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண். 83/2015, U/s.294(b),323,324,506(ii) IPC ஆக ஆக வழக்கு பதிவு செய்து வாதியின் புகார் மனுவை அசல் முதல்

தகவல் அறிக்கையுடன் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண். 2ற்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை உதவி ஆய்வாளர் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். ( **மேற்படி முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** உதவி ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) இந்த வழக்கில் புகார் வாக்குமூலம் வாங்கினேனா என்றால் இல்லை. எதற்காக வாங்கவில்லை என்ற விபரம் முதல் தகவல் அறிக்கையில் துலங்காது என்றால் புகார் மனு கொடுத்ததால் புகார் வாக்குமூலம் வாங்கவில்லை.

2) புகார் மனுவில் அருவாள் கொண்டு தாக்கியதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார் மனுவில் 6 நபர்கள் சேர்ந்து தாக்கியதாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். இரத்தம் படிந்த சட்டையும் சேர்த்து கொடுத்ததாக குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

3) சம்பவமானது கடைக்கு உள்புறமா இல்லை வெளிப்புறமா என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம்-8 ல் காலதாமதத்திற்கான காரணம் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

4) நான் சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் அ.சா.1 யிடம் புகார் மனு பெற்றதாக சொல்வதும் அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு

செய்ததாக சொல்வதும் உண்மையல்ல என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த ஒரு சம்பந்தமும் இல்லை என்றாலும் அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது )**

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.